**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.93/2024 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. கார்த்திக் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of December 2024.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார். எதிரிகளை தெரியும். என்னுடைய உறவினர்கள். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 25.05.2023 ஆம் தேதி பிற்பகல் 12.00 மணியளவில் எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து 1வது எதிரி குழந்தையை கொடு என்று மிரட்டும் தோணியில் கேட்டபோது வழக்கு இருப்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு தெரிவித்தாகவும், அப்போது 1வது எதிரி அ.சா.1 யை அவதூறான வார்த்தையால் பேசி குழந்தையை பிடுங்க முயற்சித்ததாகவும், 1வது எதிரி அருவாளின் பின்பகுதியால் வலதுகாலின் முட்டியை அடித்தாகவும், அப்போது நீங்கள் தடுத்தபோது மற்ற எதிரிகள் 2 வது சாட்சியை மாறி மாறி அடித்தாகவும், மேலும் 1வது எதிரி சாட்சி 2 யை இடதுகாலின் முட்டியை அடித்தாகவும், எதிரிகள் அனைவரும் கொலைமிரட்டல்

விடுத்ததாகவும், போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரி உறவினர்கள் என்பதாலும் அவருடன் சமரசமாக செல்வதாலும் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.